[1998 மார்ச் 20

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

35—

இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஏற்படுத்துதல்

***869—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறையில் பணிபுரியும் 2000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு இந்த திருந்திய விடையை வாசிக்கிறேன். பெருந்துறை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கென தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையைத் துவக்குவதற்கு அப்பகுதியை ஆய்வு செய்து, கோவை மண்டல மருத்துவ இயக்குநர் 5-3-1998 அன்று அறிக்கை ஒன்றை அளித்தார். அவ்வறிக்கையை ஆய்வு செய்து சாத்திய அறிக்கை (Feasibility Report) அனுப்புமாறு சேலம் மண்டல மருத்துவ நிர்வாக அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார். இதுகுறித்து அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் மத்திய ஈட்டுறுதித் திட்டக் கழகத்தின் இசைவைப் பெற்று பெருந்துறை பகுதியில் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை துவக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், திருத்திய விடையை பேரவைத் தலைவருக்கு முதலிலேயே கொடுக்க வேண்டும். என்னிடம் அது இல்லை.

திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறையில் ஏறத்தாழ 5000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். மத்திய ஈட்டுறுதி திட்டக் கழகத்தின் இசைவைப் பெற்று நடவடிக்கை

1998 மார்ச் 20]

எடுக்கப்படும் என்ற பதிலைத் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல, தமிழகம் முழுவதும் தொழில் நிறுவனங்களும், தொழிலாளர்கள் எண்ணிக்கையும் பல்வேறு இடங்களில் பெருகி வந்திருக்கின்றன. அதற்குத் தக்கபடி இ.எஸ்.ஐ. திட்டத்தை விரிவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பெருந்துறையைப் பொறுத்தமட்டில் 2200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள், 36-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள், 11 வருவாய் கிராமங்கள் இருக்கின்ற காரணத்தினாலே அங்கே இந்த இ.எஸ்.ஐ. மருந்தகம் உருவாக்கப்பட வேண்டும் என்பது குறித்து பாதகமான பிரச்சினை இல்லை. கட்டடங்கள் கூட பரிசீலிக்கப்பட்டு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. அறிக்கை அனுப்பப்பட்டுவிட்டது. குறிப்பாக சேலம் மண்டல மருத்துவ அலுவலர் அதை ஆராய்ந்து வருகிறார். விரைவிலே உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 36, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

36—

நீதிமன்றங்களை காரைக்குடிக்கு மாற்றுதல்

***1324—திரு. கே.ஆர். இராமசாமி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில் உள்ள சில நீதிமன்றங்களை காரைக்குடிக்கு மாற்றும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேவகோட்டையில் 3 நீதிமன்றங்கள் உள்ளன. எந்த நீதிமன்றத்தையும் காரைக்குடிக்கு மாற்றுகிற உத்தேசம் அரசிடம் இல்லை.